## 5.14 தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தை 2005 – 2006 ஆண்டுக்கு நீட்டித்தல்

சமூகநலம் (ம) சத்துணவு திட்டம் (சந–3) துறை

அரசாணை (நிலை) எண் 252 நாள் : 14.12.2005

படிக்க :

1. அரசாணை (நிலை) எண் 292 சந(ம) சதி துறை நாள் 04.12.96
2. அரசாணை (நிலை) எண் 132 சந (ம) சதி துறை நாள் 18.7.2002
3. அரசாணை (நிலை) எண் 262 சந (ம) சதி துறை நாள் 02.12.2004

மேலும் படிக்க :

4. செயல் இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் கடிதம் எண் 1239/டி1/2005 நாள் 26.05.2005
5. செயல் இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் கடிதம் எண் 21321/டி1/2005 நாள் 06.09.2005

**ஆணை**

மேலே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் தமிழ்நாட்டில் ரூ.1440 கோடி செலவில் தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் மூலமாக தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு திட்டத்தை (பங்காரு அம்மையார் நினைவு மகளிர் திட்டம்) செயல்படுத்தவும், முதல் கட்டமாக ரூ.2.40 கோடி செலவில் 14 மாவட்டங்களில் 1996–97 ஆம் ஆண்டில் செயல்படுத்திடவும் ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. மேலே இரண்டாவதாக படிக்கப்பட்ட அரசாணையில், ரூ.22.00 கோடி செலவில் 2003–04ஆம் ஆண்டிற்கு இத்திட்டத்தை நீட்டித்து அனைத்து மாவட்டங்களுக்கும் செயல்படுத்திட ஆணை வெளியிடப்பட்டது. மூன்றாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் இத்திட்டத்தை தொடர்ந்து 2004–05ஆம் ஆண்டில் செயல்படுத்திட ரூ.20.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டது.

3. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநர், மேலே நான்கில் படிக்கப்பட்ட கடிதத்தில் 2005–2006ம் ஆண்டில் ‘‘மதி’’ திட்டத்தை அனைத்து மாவட்டங்களில் தொடர்ந்து செயல்படுத்திட ரூ.20.00 கோடி வழங்குமாறு கருத்துரு அனுப்பினார். மேலே 5–ல் காணும் கடிதத்தில் 25.08.2005 அன்றைய மகளிர் சுய உதவிக்குழு கருத்தரங்கில் மாண்புமிகு முதலமைச்சரால் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகளையும் செயல்படுத்துவதால் மேலும் ரூ.3.91 கோடி சேர்த்து மொத்தம் ரூ.23.91 கோடியில் ‘‘மதி’’ திட்டத்தை அனைத்து மாவட்டங்களிலும் செயல்படுத்த திருத்திய கருத்துரு அனுப்பி அரசின்ஒப்பளிப்பு கோரியுள்ளார்.

4. தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் செயல் இயக்குநரது திருத்திய கருத்துருவை அரசு கவனமாக ஆராய்ந்து, 2005–2006ஆம் நிதியாண்டில் பங்காரு அம்மையார் நினைவு மகளிர் திட்டத்தை‘‘மதி’’ அனைத்து மாவட்டங்களிலும் தொடர்ந்து செயல்படுத்திட ரூ.23.91 கோடியே (ரூபாய் இருபத்து மூன்று கோடியே தொண்ணூற்று ஒரு இலட்சம் மட்டும்) நிதி ஒப்பளிப்பு செய்து ஆணையிடுகிறது.

5. (1) மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்ட செலவினத்தில் ரூ.20.00 கோடி மட்டும் கீழ்கண்ட கணக்குத் தலைப்பின் கீழ் பற்று வைக்கப்படல் வேண்டும்

> ‘‘2235 சமூகப்பாதுகாப்பும் நலனும் – 02. சமூக நலன் – 103 மகளிர் நலன் – பத்தாவது ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநிலத் திட்டம் - LC – தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு திட்டம் (மகளிர் திட்டம்) – II – உதவித் தொகைகள் 02 பொதுவான உதவித் தொகை (த.தொ.கு. எண் 2235–02–103–LC-1123)

(2) கூடுதல் செலவினத் தொகை ரூபாய் 3.91 கோடி (மூன்று கோடியே தொண்ணூற்று ஒரு இலட்சம்) தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்தின் கூடுதல் நிதி / பயன்படுத்தா நிதி ஆகியவற்றிலிருந்து மேற்கொள்ளப்படல் வேண்டும்.

6. மேலே பத்தி நான்கில் ஒப்பளிக்கப்பட்ட தொகையினை கீழ்க்கண்ட நடைமுறைகள் மற்றும் நிபந்தனைகளின் அடிப்படையில் செயல்படுத்திட வேண்டுமென்று அரசு ஆணையிடுகிறது.

அ) 2005–06ஆம் ஆண்டின் நிதி ஒதுக்கீட்டில் ஒதுக்கப்பட்டுள்ள தொகை மொத்தம் ரூபாய் 20 கோடியை தொடர்புடைய தன் வைப்புநிதியில் (PD Account) வரவு வைக்கப்பட வேண்டும்

ஆ) மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் அவர்கள் பொது வைப்பு நிதியில் உள்ள தொகையில் தேவைப்படும் தொகையை விடுவிக்கக்கோரி ஒவ்வொரு காலாண்டிற்கும் அரசின் நிதித்துறையை வழிவகைகள் (Ways and Means) அணுக வேண்டும்.

(3) மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனம் அவர்கள் தன் வைப்பு நிதியிலிருந்து (PD Account) தொகை விடுவிக்க வேண்டும்போது நிதித்துறை (வழிவகைகள்) (Ways and Means) செலவினத்தின் நிலைக்கேற்ப தொகையை விடுவிக்கும்.

7. மேலே பத்தி 4–ல் ஒப்பளிக்கப்பட்டுள்ள செலவினத்தில் ரூபாய் 20 கோடியை (ரூபாய் இருபது கோடி மட்டும்) பத்தி 6–ல் குறிப்பிடப்பட்டுள்ள நடைமுறைகள் / நிபந்தனைகளின் அடிப்படையில், மேலாண்மை இயக்குநர், தமிழ்நாடு மகளிர் நல மேம்பாட்டு நிறுவனத்திற்கு பெற்று வழங்கிட சமூக நல ஆணையர், சென்னை–5 கேட்டுக்கொள்ளப்படுகிறார். இந்த தொகை பணமாக வழங்காமல் கீழ்க்கண்ட தன்வைப்பு நிதி கணக்கில் வரவு வைக்குமாறு சமூகநல ஆணையர் கேட்டுக்கொள்ளப்படுகிறார்.

"K" வைப்புத் தொகைகளும் மற்றும் முன்பணங்களும் (B) வட்டியில்லா வைப்புத் தொகைகள்
8443 – 00–பொது வைப்புத் தொகைகள் 800 ஏனைய வைப்புத் தொகைகள் BP – 28 -
தமிழ்நாடு மகளிர் மேம்பாட்டு நிறுவன கழக வைப்புத் தொகை (த.தொ.கு. 8443–00–800-
BP-280-D)

8. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு.எண் 78/.து.செ(ஆவ) /05 நாள் 12.12.2005–ன்படி அத்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**எல்.என்.விஜயராகவன்**
அரசு செயலாளர்